ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

भक्तिः प्रेयसि संश्रितेषु करुणा श्वश्रूषूनम्रं शिरः
प्रीतिर्यातृषु गौरवं गुरुजनेक्षान्तिः कृतागस्यपि ।
अम्लानं कुलयोषितां व्रतविधिस्सोऽयं विधेयः पुनः
मद्भर्तुर्दयितेति तत्प्रियसखी वृत्तिस्सपत्नेष्वपि ॥

प्राचीनपद्यम् ॥

தம் கணவனிடத்தில் பக்தியும் தம் வீட்டு வேலைக்காரர்களிடம் கருணையும் பெரியோர்களுக்குப் பணிவிடை செய்யும்பொழுது வணங்கின முகத்துடனும் தம் பர்த்தாவினுடைய தங்கை தமக்கை முதலானவர்களிடம் பிரீதியும் மாமனார் மாமியார் முதலிய குரு ஜனங்களிடம் மரியாதையும் ஒருவர்நமக்கு அபராதம் செய்தாலும் அவரிடத்தில் பொறுமையும் இருக்குமாகில் குடும்பஸ்திரீகளுக்கு இவையாவும் சிறந்ததவமாகும். மற்றொரு விஷயமும் கவனிக்கவேண்டும். அஃதாவது தமக்கு ஸபத்நிகள் இருப்பார்களேயானால் அவர்களிடம் தம் பதிக்கு பத்நிகளாக இருக்கிறார்களென்று தனக்கு மிகவும் ஆப்தர்களான சகிகளிடத்திலிருப்பது போல் அதிக ஸ்நேகத்துடனிருக்கவேண்டும்.

குடும்பஸ்திரீகள் இவ்வுலகிலும் பரலோகத்திலும் விசேஷமான சிரேயஸ்ஸைப்பெற்றுப் பெருமையுடனிருக்க வேண்டியதற்கு ஸாதனமாகச் சுருக்கமாய் போதிக்கப்படும் மார்க்கமாவது, பலஸ்திரீகள் தம்புருஷனிடத்தில் பக்தியில்லாமலும் மற்றுமுள்ள பெரியோர்களை அவமதித்தும் வேலைக்காரர்களை ஹிம்ஸித்தும் பின்னும் குடும்பத்திற்குத்தகாத பல கெட்டகார்யங்களைச் செய்கிறார்கள். அவ்விதம் செய்வதால் அதிக கஷ்டத்தை யடைந்து பாபத்திற்கும் உள்ளாகிறார்கள். ஆகையால் இங்குகூறப்பட்ட நியமங்களைச் சரியாயனுஷ்டித்தால் எப்பொழுதும் க்ஷேமத்தைப் பெறலாம் என்பதேயாம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.

குரோதன-ஹு ஆடி-மீ ௧௨

வேதாந்தஸாரம்.

(௩௱௨-வது பக்கத்தொடர்ச்சி.)

2. சார்வாக மதஸ்தர்களுள் சிலர் கூறுகின்றதாவது:—

புத்திரன் ஆத்மாவென்று சாதிப்பது சரியல்ல.

प्रीतिमात्रात् कथं पुत्र आत्मा भवितुमर्हति ।
अन्यत्रापीक्ष्यते प्रीतिः क्षेत्रपात्रधनादिषु ॥

सर्ववेदान्तसिद्धान्ते ॥

புத்திரனிடத்தில் பிரீதி ஏற்படுவதால் அவனை ஆத்மாவாகக் கூறவியலாது. அவ்விதம் கூறுவோமாகில் பூமி, பாத்திரங்கள், தனம், பசு, கிரகம் முதலியவைகளிலும் நமக்குப் பிரீதி ஏற்படுவதால் அவைகளையும் ஆத்மாவாகக் கருதவேண்டும். ஆகையால் பிரீதியிருப்பதால் ஆன்மாவென்பது தவறாகும்.

மேலும், புத்திரனைக்காட்டிலும் அவரவர்களுக்கும் தம் தம் சரீரமே அதிகப்பிரீதி பாத்திரமாக ஆகின்றது.

पुत्राद्विशिष्टा देहेऽस्मिन् प्राणिनां प्रीतिरिष्यते ।
प्रदीप्ते भवने पुत्रं त्यक्त्वा जन्तुः पलायते ॥

பொதுவாய் சகலப் பிராணிகளுக்கும் தம் புத்திரனைக்காட்டிலும் தேகத்தில் அதிகப் பிரீதி காணப்படுகின்றது. அஃதெப்படியெனில் ஒரு வீட்டிற்குள் புத்திரனோடுதானிருக்குங்கால் அவ்வீட்டில் தீபற்றிக்கொண்டால் உடனே புத்திரனைத் திரும்பிக்கூட பார்க்காமல் விட்டுவிட்டுத் தன் சரீரத்திற்குபாதொரு அபாயமும் ஏற்

படாதிருக்கவேண்டி உடனே வெளியில் ஓடிவிடுகிறான். தன் சரீரத்தைக் காட்டிலும் புத்திரனிடத்தில் அதிகப் பிரீதியிருப்பின் அவனைப் பாதுகாக்கவல்லவோ இவன் முயற்சி செய்யவேண்டும். அவ்விதம் காணப்படவில்லையே?

பின்னும்

तं विक्रीणाति देहार्थं प्रतिकूलं निहन्ति च ।
तस्मादात्मा तु तनयो नभवेच्च कदाचन ॥

தன் சரீரத்தை ரக்ஷிக்கவேண்டி புத்திரனை ஆடுமாடுகளைப்போல் விற்றுவிடுகிறான். தன்னிஷ்டத்திற்கு விரோதமாய் நடக்கும் புத்திரனைக் கொன்றுவிடுகிறான். ஆகையால் புத்திரன் ஒருகாலும் ஆத்மாவாகமாட்டான்.

गुणरूपादिसादृश्यं दीपवन्न सुते पितुः ।
अव्यङ्गाज्जायते व्यङ्गः सुगुणादपि दुर्गुणः ॥

தீபத்தைப்போல் பிதாவினுடைய குணம், ரூபம், முதலியவைகளின் ஸாதிருச்யம் புத்திரனிடம் காணப்படுகிறதென்பதும் தவறே. ஒரு அங்கத்திலும் குறைவையடையாத பிதாவினிடமிருந்து குறைவடைந்த அங்கமுள்ள புத்திரன் உண்டாகின்றான். இதற்கு மாறுதலாகவும் குறைந்த அங்கத்தையுடைய பிதாவுக்கு பூர்ண அங்கத்தோடுகூடிய புத்திரனுண்டாகிறான். மிகவும் சிறந்த குணம்பெற்ற பிதாவிற்குக் கெட்டகுணமுடைய புத்திரன் உண்டாகிறான்.

ஆகையால்

अभासमात्रास्तास्सर्वायुक्तयोऽप्युक्तयोऽपिच ।

விசாரிக்காமல் கேவலம் மூடர்களால் சொல்லப்படும் இந்தச்சகலமான வசனங்களும், யுக்திகளும் கவனிக்கத்தக்கவைகளல்ல. ஆபாஸமானவைகளே.

பின்னும்

पुत्रस्य पितृवद्गेहे सर्वकार्येषु वस्तुषु ।
स्वामित्वद्योतनायास्मिन्नात्मत्वमुपचर्यते ॥

श्रुत्यातु मुख्यया वृत्त्या पुत्र आत्मेति नोच्यते ।
औपचारिकमात्मत्वं पुत्रे तस्मान्न मुख्यतः ॥

சுருதியில் புத்திரனை ஆத்மாவாகக் கூறப்பட்டிருப்பதை எங்ஙனம் மறுக்கமுடியும் என்று எற்படும் சங்கைக்கும் விடைபகருகின்றார்.

புத்திரனுக்குப் பிதாவைப்போல் கிருகத்தில் செய்யவேண்டிய சகலவேலைகளிலும் பூமி, பொருள் முதலிய சகல வஸ்துக்களிலும் ஸ்வாதந்திரியம் (அதாவது எஜமானனாயிருக்குந்தன்மை உண்டென்பதை யறிவிக்கவேண்டி இவனிடத்தில் ஆத்மா என்கிற பதத்தைக் கௌணமாக மரியாதைக்குச் சுருதி சொல்ல வந்ததேயல்லாமல் ஆத்மசப்தத்திற்கு முக்கியார்த்தமாகப் புத்திரன் ஆகிறான் என்கிற நோக்கத்துடன் சொல்லவில்லை. ஆகையால், ராஜஸேவகனை அரசனென்று உபசாரமாய்க் கூறுவதுபோல் புத்திரனையும் ஆத்மாவென்று சுருதி உபசாரமாய் அறிவிப்பதால் அவன் முக்கிய ஆத்மாவாகமாட்டான். பின்னை (स्थलोहं कृशोहं) நான் பெருத்திருக்கிறேன் நான் இளைத்திருக்கிறேன் என்பவை முதலான அனுபவமிருப்பதால் ஸ்தூல சரீரந்தான் ஆத்மாவென்று கருதுகிறார்கள்.

இந்த அபிப்பிராயத்தையே

प्रत्यक्षस्सर्वजन्तूनां देहोऽहमिति निश्चयः ।
एष पुरुषोऽन्नरसमयइत्यपि च श्रुतिः ॥
पुरुषत्वं वदत्यस्य स्वात्मा हि पुरुषस्ततः ।
आत्मायं देह एवेति चार्वाकेण विनिश्चितम् ॥

ஸகலப் பிராணிகளுக்கும் தமது சரீரத்தில் ஆத்மா என்கிற நிச்சய புத்தியிருக்கிறதென்பது அவரவர்களுக்கும் பிரத்தியக்ஷமாய் தெரிந்த விஷயம். சுருதியிலும் இந்தப்புருஷன் அன்னரஸமயன் என்று ஆத்மாவை அன்னரஸமயமான சரீரம் என்றும் சொல்லப்பட்டிருப்பதால் இந்தச் சரீரந்தான் ஆத்மாவென்று சார்வாகனால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. என்று பரமாசார்யாளும் வெளியிட்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹிந்துமத தர்மம்.

(௩௱௩-வதுபக்கத்தொடர்ச்சி)

8 பிரகரணம்.

வேதமோதும் கடமைவாய்ந்த வேதியர்கள் தமது தொழிலை மாறினகாரணங்கள்.

ஒரு நல்ல பக்தனான சூத்திரன் அல்லது மற்ற பிராமணரல்லாதானுடையகை (அது நன்றாய் அலம்பின சுத்தமான கையாயிருந்தாலும்கூட) அக்னிக்குப் பதிலாகுமென்று எந்த சாஸ்திரத்திலும் சொல்லப்பட்டிருக்கவில்லை. நான் சென்னபட்டினத்திலிருக்கும் ஒரு சிநேகிதனுக்கு ஒரு டெலக்ராம் மணியார்டர் அனுப்பவேண்டுமானால் போஸ்டாபீஸ் விதிகளின்படி ஒரு பாரத்தையெழுதி போஸ்டாபீஸிலுள்ள ஏற்பட்ட டெலிக்ராம் கிளார்க்கினிடம் அந்த பாரத்தையும் பணத்தையும் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒரு போஸ்டாபீஸ் அருவருப்பானஜாகாவில் கட்டப்பட்டிருப்பதாயும் அந்த மனியார்டர் கிளார்க்கு அஸங்கியமாயும் பார்வைக்கு அவலக்ஷணமாயும் சிடுமூஞ்சியாயும் பணஆசைமிகுந்தவனாயுமிருப்பதாய் வைத்துக்கொள்ளுவோம். நான் அதினாலே டெலக்ராம் மணியார்டரைச் சரியானபாரத்தில் எழுதாமலும் துர்கந்தம்வீசும் போஸ்டாபீஸ்ஜாகாவை வெறுத்தும், அஸங்கியமான கிளார்க்கினிடத்திற்போகாமல் கோபித்துக்கொண்டும் நேராய் அழகாய்ப் பூந்தோட்டவசதியடைந்த உப்பரிகைகள் அமைந்த ஒரு டிஸ்திரிக்கட்ஜட்ஜியினுடைய பங்களாவிற்குத் தடதடவென்றுபோய் அங்கே லக்ஷணமாய் வைக்கப்பட்டுக் காணப்படும் ஒருபெட்டியில் பணத்தைப் போட்டுவிட்டுச் சென்னப்பட்டினத்திலிருக்கும் சினேகிதன்கைக்கு நிச்சயமாய் பணம்சேர்ந்துவிடுமென்று திருப்தியாயிருந்தால் எப்படியோ அப்படிப்போல வேதான் மேற்கண்டவர்களின் புதுமாறுதலான ஏற்பாடுகள் என்னலாம். பிராமணரல்லாத ஹிந்துக்களுக்குள் தப்பபிப்பிராயம் கொண்டிருக்கும் நம்முடைய சினேகிதர்களில் அனேகருடைய

யோஜனையில்லாத நடவடிக்கைகளையும் தார்மிகவிஷயத்தில் கேடான செய்கைகளையும் வரவர அதிக மூர்க்கமான நிலைமையையும் கண்டு நாம் இரக்கப்படவேண்டியிருக்கிறது. ஆகையால் பிராமணர்களாகிய நாம் பிரதிதினமும் செய்யும் நித்யகர்மாவோடுகூட ஒரு முக்கியகடமையாகச் செய்யவேண்டியிருப்பது என்னவெனில் சீக்கிரத்தில் நம்முடைய சிநேகிதர்களுக்கு நல்லபுத்தியையும் சரியானநிலைமையையும் கொடுத்து அவர்களை ஆரியதர்மமார்க்கத்திற்கு மறுபடியும் கைதூக்கிவிடும்படி கிருபைசெய்ய வேண்டுமென்று நாம்ஒவ்வொருவரும் ஈச்வரனைப்பிரார்த்திப்பதுவேதான்.

(1) வேதத்தை ஒருவர் நம்புவதாயிருந்தால் அந்த வேதத்தில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளை நம்பித்தானாக வேண்டுமல்லவா? வேதஞானத்தை மற்றவர்களுக்குப் போதிக்கும் கடமை பிராமணர்களுக்கு உரித்தானதென்று அந்த வேதத்திலேயே வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிக்கு ஏற்பட்டகாரணம் என்னவெனில் பிராமணர்களாகிய நீங்கள் உங்கள் பிரவரத்தாலும் கோத்திரத்தினாலும் தெரியவருகிறபடி வேதத்தை ஆதியில் காப்பாற்றிவைத்திருந்த மஹாத்மாக்களான ரிஷிகளில் ஒரு ரிஷியினுடைய வம்சத்திலிருந்து நேரே உற்பத்தியாய்த் தொடர்ந்து வந்திருப்பதினாலும், வேத ஸம்ஸ்காரத்தினால் சுத்தம் செய்யப்பட்டதாயின் கர்ப்பத்தில் புகுந்த காலம்முதல் அப்போதைக்கப்போது தேக சுத்தியையும் மனச்சுத்தியையும் உத்தேசித்து நீங்கள் செய்துகொண்டு வந்திருக்கும் வேதஸம்ஸ்காரங்களால் நீங்கள் சுத்தப்பட்டிருப்பதினாலும்தான்.

(2) இப்படியிருக்க சுதந்தரமான மனதும் கட்டுப்படாத செய்கையும் பெரிதென்றெண்ணிக் கொண்டிருக்கும் இந்த விபரீத காலத்தில் அருகனல்லாத ஒருவன் நியாயத்தையும் புராதன ஆசாரணையையும் திரஸ்காரம் செய்து வேதத்தைத் தான்படித்துப் போதிப்பேன். அத்யயனம் செய்வேனென்று வீம்பாய் முன் வரலாம். ஆனால் அப்படித்தானும் அருகனில்லாதிருந்து வம்ச பாம்பரை பாத்தியமுமில்லாதிருக்கும் ஒருவன் வேதம் சொல்லுவதில் அதிக்ரமிப்பனேயானால் அவனால்சொல்லப்படும் வேதமும்

வேதமல்ல. அந்த வேதத்தின் உண்மையான சக்தியும் சிதறிப் போகும்.

(3) அதிகாரமில்லாத ஒருவன் எவ்வளவு புத்தியிருந்தாலும் படித்திருந்தாலும் வேதத்தை உச்சரிக்கவும் பிறருக்கு அர்த்தம் சொல்லவும் அருகனல்லன் என்றும், அப்படிச் சொல்லும் வேதம் வேதமாகாதென்றும் நிச்சயமாய்ச் சொல்லலாம். நியாயக்கோர்ட்டிலுள்ள ஒரு வைக்கீல் எவ்வளவு புத்திசாலித்தனத்தோடானாலும் எவ்வளவு நடுநிலைமைபொருந்திய எண்ணத்துடனானாலும் ஒரு தீர்மானத்தை ஸ்திரப்படுத்திப் பேசினாலுங்கூட அது கோர்ட்டாருடைய தீர்ப்பாகுமா? மந்தபுத்தியமைந்தவனாயிருந்தாலுங்கூட நியாயாதிபதியின் ஸ்தானத்திற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு ஜட்ஜியினுடைய வாக்குமூலமாய் உண்டாகிற தீர்மானமல்லவோ ஜட்ஜ்மெண்டென்று எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டு லாப்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

(4) அதுவுமன்றித்தகுந்த யோக்கியதை யுள்ளவர் வேதம் சொல்லும்பக்ஷத்தில் அது சொல்பவருக்கும் கேட்பவர்களுக்கும் நன்மையைப் பயக்கும் சக்திவாய்ந்ததென்றும், தகாதவன் வேதம் சொல்வதினால் தீமைபயக்குவதுமன்றிச் சொல்பவனுக்கும் கேடுண்டாகுமென்றும் நீங்கள் அறிவீர்களாக இப்படி வேதம் சொல்லத்தகாதவர்களென்று சிலரை விலக்கும். விதரணையானது எவ்விதமான த்வேஷத்தினாலுமல்ல. எல்லாருடைய நன்மையையும், க்ஷேமத்தையும் உத்தேசித்து வேதத்தின் சிரேஷ்டத்தை ஒருவருக்கும் தீங்கில்லாமலும் சகலருக்கும்நன்மை செய்யுமாறும் காப்பாற்றி வைக்கும் எண்ணத்தோடு ஏற்படுத்தப்பட்ட விதரணையேயாகும்.

(5) வேதத்தைச் சொல்லுவதானது பிராமணர்களுக்குள்ளும் எல்லாருக்கும் விதிக்கப்படவில்லை. எல்லாச் சமயத்திலும் சொல்லத்தகுந்ததுமல்ல. எப்படியெனில் வேதத்தை பிராமண ஸ்திரீகள்கூட அத்யயனம் செய்யக்கூடாது. பிராமணர்களாயினும் தீண்டல் அசூசியோடிருக்கும்போது அவர்களுக்கும் வேதத்தைச்சொல்ல அதிகாரமில்லை.

(6) வேதத்திற்கு ஆதாரமாகிய வேதபுருஷனுடைய கட்டளேயே அப்படி ஏற்பட்டிருக்கிறது. வேதத்தைச் சொல்ல யார் அருகரென்றும் யார் அருகரில்லேயென்றும் தீர்மானிக்கும் அதிகாரம் நம்முடையதல்ல. அந்த வேதபுருஷன் சொல்லியிருக்கும் ஆக்ஞையே நமக்குப் பிரமாணமாகும். ஆகையால் வேதார்த்தத்தின் உண்மையைப் பிறருக்குப் போதிக்கும் சுதந்தரமானது வேதத்தைப் பாதுகாக்கும் கடமையை வகித்த பிராமணர்களாகிய உங்களுடையதேயாகும். ஆனால் அப்படி வேதத்தைப் பிறருக்கு எடுத்துரைக்கப் போதுமான வ்யுத்பத்தியும் அனுஷ்டான ஆசாரணேயும் சுத்தமும் உங்களுக்கு இப்போது இருந்தாலல்லாது வேதத்தைப்பிறருக்குப் போதிப்பது அசாத்தியமாகும். நாளடைவில் உங்களாலும் முழுதும் விலக்கமுடியாத அனேகக் காரணங்களால் நீங்கள் இப்போது இருக்கப்பட்ட நிலைமை நிர்வாக சக்தி இல்லாமையால் மிகவும் தாழ்ந்துபோயிருக்கிறது. இனி நீங்கள் ஆத்மார்த்த போதனைக்கு அருகராகும்படியான பழைய ஸ்திதிக்கு எப்படி ஏறப்போகிறீர்களென்ற ஏக்கம் மனதில் உண்டாயிருக்கிறது. உங்களது நிலைமை தாழ்ந்துபோயிருப்பதற்குப் பல காரணங்களுண்டு.

(7) இப்போது நடந்துவரும் ராஜரீகத்தில் உங்களுடைய மனநோக்கத்தினுடைய போக்கே மிகவும் மாறியிருக்கின்றது. உங்களுடைய காலமெல்லாம் பதார்த்த சௌகரியங்களைத் தேடிக்கொள்வதிலேயே முழுதும் வீணுய்க் கழிந்துகொண்டிருக்கிறது. அந்தப்படி தேடிக்கொள்ளும் சௌகரியங்களிற்கூட சில அவசியமானதும் அனேகம் அனுவசியமானதுமாயிருப்பதுமன்றி அவைகளைத் தேடிக்கொள்ளும் முயற்சியில் நீங்கள் உங்களுடைய சகோதரர்களாகிய வைச்ய சூத்திரர்களோடு போட்டிபோடும் தீமைக்கு உட்படுத்திக்கொண்டுமிருக்கிறீர்கள். ஆகவே கவர்ன்மெண்ட் ஸர்விஸிலும், இதர ஸர்விஸிலும் பணம் சம்பாதிக்கும் உத்தியோக ஸ்தானங்களைப் பிராமணர்களாகிய நீங்களே பெரும்பாலும் கைப்பற்றிக்கொண்டிருக்கிறீர்களென்று ஓர் அபவாதம் எங்கும் கிளம்பியிருக்கிறது.

(8) இப்படி உங்களைக் குற்றம் சாட்டுவோர்கள் வேளாண்மை, வர்த்தகம், வியாபாரம், கைத்தொழில் முதலிய துறைகளில் அதிகப் பொருள் சம்பாதிக்கும் லாபகரமான வேலைகளையெல்லாம் தாங்களே ஆக்ரமித்து அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்ற வாஸ்தவத்தை எண்ணிப்பார்க்க மறந்துபோயிருக்கிறார்கள் என்பதை நீங்கள் நன்றாய்க் கவனியுங்கள்.

(9) க்ஷத்திரிய ஜாதியரே இப்போது எங்கும் காணப்படவில்லை. வடக்கேசில க்ஷத்திரியர்கள் இருந்தாலும் அவர்களின் ஸங்கியை மிகவும் குறைவேயாகும். க்ஷத்திரியர்கள் துர்லபமாய் போகவே இந்திய ராஜசக்கிரவர்த்தி அவர்களால் நடத்தப்பட வேண்டிய ராஜரீகமான நியாயசபைகளிலும் பலவித உத்யோக ஸ்தானங்களிலும் தலைமைவாய்ந்த நீங்கள் தலையிட்டுக்கொள்ளும்படி நேர்ந்துவிட்டது. அந்தவேலைகளெல்லாம் க்ஷத்திரியர் கடமையாயிருந்தன என்பதுஉண்மையே க்ஷத்திரியரில்லாது போனதினாலும் காலத்தையனுசரித்துக் காலக்ஷேபம் செய்யவேண்டிய கொடுமையினால் நிர்ப்பந்திக்கப் பட்டதாலும் நீங்கள் உங்களது பிரதானவைதீக தர்மத்திற்கு இடைஞ்சலாயிருப்பினும் அதைப் பாராட்டாமல் உலகத்தின் நன்மையைக்கருதிப் பலவிதமான உத்யோகங்களில் நுழைந்து கொண்டிருக்கிறீர்கள்.

(10) அப்படி நடந்திருப்பது கிரமமேயல்லவா. எப்போது க்ஷத்திரிய ராஜாக்களால் நியமிக்கப்படவேண்டிய ஸ்தானங்கள் காலியாயிற்றோ அப்போதே அவைகளை நிரப்பத்தகுதியுள்ள வகுப்பினரைத் தெரிந்து எடுக்கவேணுமேயல்லது தகுதிக்குறைவானவர்களை அந்த ஸ்தானங்களில் அமர்த்தல் உசிதமாகுமா? அப்படிச் சரியானவர்களை அமர்த்தாவிடில் ராஜரீகம் ஒழுங்காய் எப்படி நடைபெறும்? பிராமணரல்லாதவர்கள் இக்காலத்தில் கொண்டு வந்திருக்கும் புகாரானது நியாயமானதா? சற்றுயோசியுங்கள் அவர்களை மேற்படி உத்யோகங்களுக்குத் தகுதியாய்ப் போட்டிபோடக் கூடாதென்று யாராவது தடுத்தார்களா? அப்படித்தகுதிக் குறைவிருந்தால் அதைச்சரிப்படுத்திக் கொள்ள வித்யாபிவிர்த்தி செய்யும் பிரயத்தனத்தை அவர்கள் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது? அது விஷயத்தில் வேண்டிய உதவியை

அவர்களுக்கு நீங்களும் செய்ய வேண்டியதுதான். அதைவிட்டு அவர்கள் புகார்செய்ய என்ன நியாயமிருக்கின்றது? மதராஸ் யுனிவெர்ஸிடி அதிகாரிகள் பரிக்ஷையில் பிராமணர்களை ஏராளமாய்ப் பியாஸ்செய்து வைப்பதுகூடப் பக்ஷபாதத்தினாலும் அக்ரமத்தினாலுமென்று பிராமணர்களல்லாதவர்கள் அந்த அதிகாரிகள்பேரிலும் குற்றம் கூறுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

சென்னை ராஜதானியில் 1919௵ வரையில்
பெரிய பரிக்ஷைகளில் தேறினவர்களின் சங்கியைக்கு ஜாப்தா.

பரிக்ஷையின் பெயர்.	தேறின எல்லா ஜாதியாரின் மொத்தம்	தேறின ஹிந்துக்கள் மட்டும்மொத்தம்	அந்த ஹிந்துக்களில் தேறின பிராமணர்களின் சங்கியை	அதில்தேறின பிராமணரல்லாதஹிந்துக்களின் சங்கியை
பழைய B. A.	12841	11360	8778	2582
புது B. A.	3310	2870	1943	927
M. A.	618	555	477	78
L. T.	1756	1380	1195	185
B. L.	4065	3830	2980	850
S.S.L.C.	2305	2130	1570	560
M. L.	69	67	58	9
L. M. S.	485	330	173	157
B. M. S.	212	147	87	60
M. D.	14	7	6	1
B. Science	7	7	6	1
B. C. E.	183	157	139	18
B. A. Hon	585	519	393	126
கூடுதல்	24070	21232	16235	4997

ஸென்ஸஸ் கணக்குப்படி இந்தராஜதானியில் $6\frac{1}{2}$ லக்ஷம் பிராமண ஆண்களும் $176\frac{5}{8}$ லக்ஷம் பிராமணரல்லாத ஹிந்து ஆண்

களுமிருக்கிறார்கள். அதாவது, பிராமண ஆண் சங்கியையைக்காட்டிலும் இதர ஹிந்து ஆண்கள் 27 மடங்கு அதிகமிருக்கிறார்கள். இந்த ஜனத்தொகைத் தாமாஷாப்படி பார்த்தால் மேற்கண்டபடி 21232 தேறின ஹிந்துக்களில் 766 பிராமணர்களாயும் 20468 பிராமணரல்லாத ஹிந்துக்களாயும் இருக்கவேண்டியதற்குப் பதிலாக 16235 பிராமணர்களும் 4997 பிராமணரல்லாத பேர்களுமல்லவோ தேறி இருக்கிறார்கள். ஜனத்தொகைக்குச் சரியாய்த் தேறினவர்களை நிரவவேண்டுமானால் தேறின பிராமணர்களில் 15471 பேர்களைத் தூரத்திவிட்டு அவர்களுக்குப் பதில் 15471 இதர ஹிந்துக்களைத் தேறவைக்கவேண்டும். அப்படிச் செய்வதானது பரிசைக்ஷகளிலும், கலாசாலைகளிலும் பிராமணர்களை நுழையவிடக் கூடாதென்று பீனல் சட்டம்செய்து தடுத்தாலொழிய எப்படிச்சாயும்? தற்காலம் வேலைகளிலுள்ள 159 ஹிந்து டி. கலெக்டர்களில் 112 பேர் பிராமணர்களாயும், 214 ஹிந்து தாசில்தார்களில் 142 பேர் பிராமணர்களாயும், 281 ஹிந்து டிப்டி தாசில்தார்களில் 213 பேர் பிராமணர்களாயும் இருக்கிறார்கள். இன்னும் மற்ற டிபார்டுமெண்டுகளிலும் இவ்விதமே பெரும்பாலோர் பிராமணர்களாகவே இருக்கிறார்கள். பிராமணரல்லாத ஹிந்து உத்தியோகஸ்தர்களின் சங்கியை எவ்வளவோ அதில் 27ல் ஒரு பங்குமாத்திரம் பிராமண உத்தியோகஸ்தர்களிருக்கும்படி வைத்துக்கொண்டு மீதி பிராமண உத்தியோகஸ்தர்களைத் தூரத்திவிட்டு அவர்களுக்குப் பதிலாய் வேலையைச் சரியாய்ப் பார்க்கும் சாமர்த்தியமுள்ள பிராமணரல்லாத ஹிந்துக்கள் அகப்படுவார்களா என்று தேடினாலும் அகப்படவழியில்லை. 10000 பிராமணர்களில் 175 பேர்கள் படித்துப் பெரிய பரிக்ஷைகள் தேறிவர, பிராமணரல்லாத ஹிந்துக்கள் 10000 பேருக்கு $2\frac{3}{4}$ பேர்கள்மட்டும் அப்படிப் படித்துத் தேறும்படி இருப்பானேன்? அவர்களும் விஸ்தாரமாய்த் தேறும்படி கலாசாலைகளில் சேர்ந்து படிக்கும்படி முன்வருவதை யார் தடுத்தார்கள்? தங்களது நிறைந்த நிலபுலன்களையும், செல்வங்களையும் பாதுகாக்கவேண்டி பிராமணரல்லாதவர்கள் விலகியிருந்தால் அதற்கு ஏழைப் பிராமணர்களா ஜவாப்தாரிகளாவது? (தொடரும்)

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரெங்கஸாமி அய்யர்.

செட்டிகப்பலுக்கு செந்தூரான் துணை.

॥ शरणं श्रेष्ठितरणेः श्रीजयन्तीपुरीश्वरः ॥

ஆஸ்திகனான ஒவ்வோர் கிரந்தகர்த்தாவும், வியாபாரியும், கடிதம்எழுதுவோரும், தமதிஷ்டதேவதையை மனோவாக்காயங்களில் ஒன்றால் வணங்கியும், துதிசெய்தும், 'ராமஜயம்' 'சிவமயம்' 'கணபதிதுணை' 'முருகன் துணை' போன்ற வசனங்களைப்பத்திரிகையின் தலைப்பில் வரைந்தும் மங்களஞ்செய்வதைக்கண்டிருக்கிறோம்; இதுபோலவே, ஆபத்திற்கு ஆஸ்பதமான துறையில் இறங்கின சிலர் ஈச்வரனையே தஞ்சம் என்று நம்பி, வாய்விட்டு ஸ்தோத்ரஞ் செய்து நலம் பெறுகின்றனர். அவ்வித வசனங்களில்— 'செட்டிகப்பலுக்கு செந்தூரான் துணை' என்ற பழமொழியும் ஒன்று. அபாயகரமான ஆழியில் செல்லும் செட்டியின் (கப்பலுக்கு)மரக்கலத்திற்கு ஆபத்துகள் அநந்தம்; காலவியற்கையில் மாறுதல் ஏற்பட்டு புயல்காற்று அடிக்குமாகில், மரக்கலம் கவிழ்ந்து, பொருட்சேதத்தை மிகுதியாக விளைவித்துவிடும் என்பது யாவரும் அறிந்ததே. கடவுள் திருவருளாலேயே சிறிதும் பெரிதுமான முயற்சிகள் யாவும் கைகூடுகின்றன. இஃதையே இப்பழமொழி நன்கு போதிக்கின்றது. ஸ்ரீஜயந்திபுரம் என்ற திருச்செந்தூரில் கடற்கரையில் திவ்யக்ஷேத்ரத்தில் திருக்கடவுளை 'செந்தூரான்' 'செந்திலாதிபன்'...இவைபோன்ற திருநாமங்களால் பக்தர்கள் அழைப்பது வழக்கம்; ஆதலால் செந்தூரான் என்னும் பெயர் ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யருக்கே காரணப்பெயராக வாய்ந்திருக்கின்றது; ஸுப்ரஹ்மண்யபுஜங்கஸ்தோத்ரத்தில்,

यथाऽब्धेस्तरङ्गा लयं यान्ति तुङ्गाः तथैवाऽपदः सन्निधिं सेवमाने।
इतीवोर्मिपङ्क्तीर्नृणां दर्शयन्तम् सदा भावये हृत्सरोजे गुहं तम्॥

எவனொருவன்என் ஸந்நிதியில்வந்து ஸேவிக்கின்றானோ, அவனுடைய தீங்குகள் யாவும் இச்சமுத்திரத்தில் தோன்றி மறையுமுயரமான திரைகள்போல மறைந்துவிடும் என்று பக்தர்களுக்கும் பிறருக்கும் ப்ரத்யக்ஷமாக காண்பித்துக்கொண்டிருப்பதுபோல

தோற்றுகின்ற கார்த்திகேயனை யான் எப்பொழுதும் தியானஞ் செய்கிறேன். தேவர்களின் இடர்களை அகற்றினவரல்லவா இவர்! என்று ஸ்ரீமத்பகவத்பாதாசார்யார்கள் திருவாய்மலர்ந்து அருளி யிருக்கின்றனர். இம்மாதிரியே 'அநாதைக்குத் தெய்வந்துணை' போலுள்ள பழமொழியும் வழங்குகின்றது.

நாம் எந்தப்பொருளில் அதிகப் பற்றுதல்கொண்டுள்ளோ மோ, அதைப்பற்றி அதிகமாகக் கவலைகொள்ளாமல், 'எல்லாம் ஈசன் செயல்'என்று கடவுளையே எப்பொழுதும் மனதில்நினைந்து வழிபடுவோமாகில், நமது முன்ஜந்மத்திய நல்வினையின் பயனாக, அப்பொருள், காப்பற்ற காடுமேடுகளின் எங்கிருந்தாலும் ஸரி இரக்ஷிக்கப்பட்டே விளங்கும்; இல்லையேல், வீட்டில், ஸாவ தானமாகப் பரிபாலித்தாலுங்கூட தீவினையின்பயனாக தத்க்ஷண மே மறைந்துபோய்விடும். இக்கருத்தையே,

अरक्षितं तिष्ठति दैवरक्षितम् सुरक्षितं दैवहतं विनश्यति ।
जीवत्यनाथोऽपि वने विसर्जितः कृतप्रयत्नोऽपि गृहे विनश्यति ॥

என்ற நீதிவாக்கியம் அறிவிக்கின்றது.

'அநாதநாதன்' என்ற மிகச் சிறப்புபெற்ற திருநாமமும் ஸர் வேச்வரன்ஒருவருக்கே நன்குபொருந்தும். ஸகலகலாவல்லபரான ஸ்ரீ பார்த்தஸாரதி மிச்ரபண்டிதர்,

लक्ष्मी कौस्तुभवक्षसं मुररिपुं शंखासिकौमोदकी-
हस्तं पद्मपलाशताम्रनयनं पीताम्भरं शार्ङ्गिणम् ।
मेघश्याममुदारपीवरचतुर्बाहुं प्रधानात्परम्
श्रीवत्साङ्कमनाथनाथममृतं वन्देमुकुन्दं मुदा ॥

சாஸ்த்ரதீபிகையின் நாண்முகத்தில் லக்ஷ்மீதேவி, கௌஸ்துப மணி இவ்விரண்டையும் மார்பில் அணிந்தவரும், முரன் என்ற அஸுரனை வென்றவரும், பாஞ்சஜந்யம் என்ற சங்கத்தையும், நந் தகம் என்ற கத்தியையும், கௌமோதகி என்ற கதையையும் கை களிலேந்தியவரும், தாமரை இதழ்போல விசாலமான(கருணாரஸந் ததும்பிய) சிவந்த கண்களுடையவரும், மஞ்சள் நிறமான வஸ்தி

ரம்தரித்தவரும், சார்ங்கம் என்ற வில்லாளியும் நீலமேகச்யாமளமூர்த்தியும், பக்தர்களுக்கு நான்கு புருஷார்த்தங்களையும் உதாரமாகவளிக்க வல்லமையுள்ள பருமனுன நான்கு கைகளுடன் கூடியவரும், மாயைக்கப்பாலுள்ளவரும், ஸ்ரீவத்ஸம் என்ற மருவினுலிலங்குபவரும், அநாதரக்ஷகரும், அழிவற்றவரும், முகுந்தம் என்ற நிதிபோல ஸர்வாபீஷ்டத்தையும் அளிப்பவருமான ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஸந்தோஷமாக நமஸ்கரிக்கிறேன் என்று வணங்கியிருக்கிறார். காதம்பரீகாரரான ஸ்ரீபாணபட்டர்,

जन्मान्तरकृतं हि कर्मफलमुपनयति पुरुषस्येह जन्मानि ।
पूर्वजन्मकृतं कर्म तद्दैवमिति कथ्यते ॥

இவ்வாறு கூறுகிறார்.

முன்ஜந்மத்திய நல்வினை தீவினையே தெய்வம் என்று கூறப்பட்டிருப்பதால், நாமெல்லோரும் இஜ்ஜந்மத்திலாவது நல்வினைகளையே செய்து, பின்னுல் நற்பயனுநிக்குமாறு, ஸர்வேச்வரனை அநுதினமும் போற்றுவோம.

கே. ஏ. இராமலிங்கசாஸ்திரி,
'ஸம்ஸ்கிருத காமதேனு' பத்திராதிபர், கல்லிடைக்குறிச்சி.

ரஸமஞ்சரி.

விவாஹத்திற்குரிய யந்திரம்.

ப்ரான்ஸ் தேச நிபுணரொருவர் "விவாஹ தம்பதிகளின் ஐக்கியத்தை விவாஹமாகும் முன்னரே கண்டுகொள்ளும்" வழியை ஒரு யந்திரத்தால் ஸாதிக்கிறாராம்! விவாஹஞ்செய்ய விரும்பும் பெண்ணினது சுவாசகோசத்தை [மூச்சுக்குழலை]க் கண்ணுடியின் மூலமாகப் பார்ப்பாராம். சுவாஸயந்திரத்தின் உருவம் கண்ணுடியில் நெருக்கமாகத் தோன்றுமாயின் அவள் நன்ருக மூச்சுவிட முடியாது வருந்துவாள் என்றும், கலஹப்பிரியை என்றும்

தெரிந்து கொள்ள வேண்டுமாம். விரிவான சுவாசகோசம் அமைந்த ஸ்திரீகள் நன்ருக சுவாசம் விடுவதோடு பெரும்பாலும் நற்குணவதிகளாக விளங்குவாளென்றும் அவர் பரீட்சையினுல் நிரூபிக்கின்ருராம். ஸ்ரீ வராஹமிஹிரரின் ஸாமுத்ரிக சாஸ்திரத்தையும், இந்திய ஜோதிடக் கலையென்ற சிந்தாமணி யந்திரத்தையும் இயற்கைச் செல்வமாக அமையப்பெற்ற இந்தியர்க்கு அந்த யந்திரம் எவ்வளவு உதவியாகுமென்று நாம் கூற வேண்டுமோ.

“தீபாராதநஸம்பாவனை ஏற்பாடு” சிலாகிக்கத்தக்கது. அதைக்கொண்டு பலஸத் காரியங்களையும் நடத்த எளிதாகும். அந்த விஷயமான அறிக்கையை ஜனஸமூஹத்தில் பிரசாரஞ் செய்வோரிடம் “ஆர்யதர்மபத்திரிக்கையின்” துண்டுப் பிரசுரங்களையும் இனமாக (மாதிரிக்கு) வழங்கச்செய்து, ஷை பத்திரிகை பிரதி கிராமங்களிலும் பரவும் வண்ணம் நினைவூட்டலாம்.

தற்காலம் சிரோமணி கிளாஸிற்கு உரிய பாடபுத்தகங்களில் வேதங்கள் “பௌருஷேயங்கள் மனிதர்களால் செய்யப்பட்டவைதான்” என்ற அபிப்பிராயம் தாராளமாகக் காண்கின்றது. அவ்வித புத்தகங்களைப் படித்த ஒரு நண்பர் திருவனந்தபுரமிருந்து வந்திருந்தார். அவரது பாண்டித்யம் ஒருவாறு கொண்டாடத்தக்கதாயிருந்ததாயினும், வைதிகமத வித்தாந்தத்தில் அவருக்கு உண்மையான ஞானம் மாத்திரம் காணப்படவில்லை. அதன் காரணத்தை வேருேர் சமயத்தில் அவரே யோசித்தபொழுது தமக்குக் கலாசாலையில் புகட்டிய படிப்புமுறையின் பலன்தான் என்றும் தெரிந்துகொண்டார்.

சிரோமணி வகுப்புக்கு வேதங்களினின்றும் சிற்சில பகுதிகளைத் தெரிந்தெடுத்து பாடபுத்தகமாக வைக்கும் வேலையையும் ஆர்யமதாபிமானிகள் மேற்போட்டுக் கொள்ளவேண்டும். வித்யாஸ்தானங்களில் மதஸம்பந்தமான எந்த கிரந்தம் பாடமாக அமைந்தாலும் அவைகளை “வடிக்கட்டி சுத்தஞ்செய்து அளித்தாலன்றி மாணுக்கர்களின் ஹ்ருதயத்தில் ஆர்யமதாபிமானம் உறுதியாக ஜ்வலிக்காது.

ஆர்யமாணவர்கள் எவ்விதக்கல்வி கற்றாலும் அவர்களின் கல்வி நீடித்துப்பயன் தருவது அவசியமானால் ப்ரம்மசர்யவ்ரு தம் கட்டாயமாக கவனிக்கப்படவேண்டும். பாஷையின் அழகை உத்தேசித்துச் சில நாவல்களை மாணாக்கர் படிக்குமாறு உபாத்யா யரின் உத்திரவு ஏற்படுவது சகஜமாயிருப்பதை யாவரும் அறிவர் ச்ருங்கார ரஸஸம்பூர்ணமாயும் ஆர்ய ஆசாரங்களின் மர்யாதையை உல்லங்கனம் செய்வதாயுமுள்ள நாவல்களை வாலிபர்கள் படித்து வந்தால் அவர்களின் மனம் வித்யையில் அழுத்தமாக நிற்குமா! அவ்விதக் குற்றங்களின்றிய நாவல்கள் பாஷாபிவ்ருத்தி முறை யில் பாடங்களாக ஏற்படுவதை எவரும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்வர். ப்ரஹ்மசர்ய வ்ரதத்திற்கும் ஆர்யர்களின் சிறந்த ஆசா ரங்களுக்கும் கௌரவம் கற்பித்து, ஸதாசாரங்களில் திவ்ரமான அன்பு ஜனிக்கத்தக்கவாறு புத்தகங்கள் அமைவது நலமல்லவா?

"வேதபாடசாலைகளுக்குப் பிள்ளைகள் வேண்டும்" என்ற விளம்பரமொன்று சுதேசமித்திரனில் வெளிவந்தது. அதைப் பற்றி ஆர்யதர்ம வாசகர்களும் யோசித்திருப்பார்கள். ஆனால், நடுப்பட்டணத்தில் சில இடங்களிலே வேதபாடசாலைகள் ஸ்தா பிக்கப்பட்டுள்ளன. டிராமாவும், ஸினிமாவும், ஆங்கிலநாட்டு நாக ரிக தடபுடல்களும் நகரங்களையே தமக்கு ஆச்ரய ஸ்தானமாகக் கொண்டிருப்பதால் அவ்வித நகரங்களின் மத்தியில் வேதபாட சாலைகளிருப்பது நலமல்ல. சிறுவர்களுக்கு சுபவாஸனை அங்கு எவ்விதம் ஏற்படும்? நதிதீரங்கள், கிராமங்கள் இவைகளே வேத சாஸ்திர வித்யாலயங்களுக்கு உரிய க்ஷேத்திரமாகும்.

தனியே வேதாத்யயனம் மாத்திரம் போதிப்பதோடு வ்யுத் பத்திக்கும் வழிசெய்தால்தான் மாணாக்கர்களுக்கு ஞானசக்ஷுஸ் பிரகாசிக்கும். தற்காலமுள்ள வேதபாடசாலைகளிலும் இந்த ஏற் பாட்டை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

(தொடரும்)

ஸ்ரீ ஜாநகீஜாநி:.